## வீதித் துறை உதவிச் செயற்திட்டம் - கிராமிய வீதி முன்னோடிக் கூறின் 2013

வீதித் துறை உதவிச் செயற்திட்டம் - கிராமிய வீதி முன்னோடிக் கூறின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138 சீஈ ஆம் இலக்க அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01 (பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

வீதித் துறை உதவிச் செயற்திட்ட அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பின்வருவன உள்ளடங்களாக மாகாண சபைகளுக்காக மூன்று ஒப்பந்தகளிலும் பிரதேச சபைகளுக்காக ஒன்பது ஒப்பந்தங்களிலும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

(அ) பிரதேச சபைகளின் கிராமிய வீதி முகாமைத்துவத்தினையும் பராமரித்தல் முறைமையையும் பலப்படுத்தல்.

(ஆ) கிராமிய வீதிகளின் நுழைவு ஆற்றலை மேம்படுத்துவதற்காக கிராமிய வீதிகளின் ஏறத்தாழ 635 கிலோமீற்றர்களை புனரமைத்து பேணிவருதல்.

(இ) கிராமிய வீதி முகாமைத்துவம் மற்றும் பிரதேச சபைகளுக்கான செயற்திட்டங்களின் பராமரித்தல் முறைமையினை பலப்படுத்தல் அடங்கலாக தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவமும் நிர்மாண மேற்பார்வையும்

(ஈ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பதவியணியினர், மாகாண சபைகளினதும் பிரதேச சபைகளினதும் செயற்திட்டப் பதவியணியினர், ஒப்பந்தகாரர்கள் மற்றும் உசாத்துணையினர் ஆகியோருக்கான இயலுமைக் கட்டியெழுப்புதல் அடங்கலான பயிற்சியளித்தலும் நிறுவன ரீதியான பலப்படுத்தல்களும்.

(உ) செயற்திட்டத்தின் பகுதி பீ இற்காக சுயாதீன தொழில்நுட்பக் கணக்காய்வை பொறுப்பேற்றல்

(ஊ) செயற்திட்டத்தின் பகுதி பீ இற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.

அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொலர் 14 மில்லியனாக காணப்பட்டதுடன் மொத்தத் தொகையையும் நிதியிடுவதற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது செயற்பாடுகளை 2006 மே 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 2014 செப்தெம்பர் வரை செயற்திட்டம் காலநீடிப்புச் செய்யப்பட்டது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு அமைவாக தயாரித்து நியாயமாக சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவத்தின் பொறுப்பாகவுள்ளது. மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையாக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், நியாயமான சமர்ப்பித்தலிற்காக உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்தல் மற்றும் பேணிச் செல்வதற்கான பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தலும் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள

தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் கணக்காய்வுப் பணிகளுக்குத் தேவையான போதியளவு தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கமைய எனது அபிப்பிராயத்துக்கு ஏற்ற அடிப்படையொன்று எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது என்பது எனது நம்பிக்கையாகும். பின்வருவனவற்றை மதிப்பாய்வு செய்வதற்கு அவசியமான முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் பரீட்சித்தல், கொடுக்கல்வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகளின் அத்தகைய பரிசோதனை என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாடு மற்றும் செயற்திட்ட செயற்படுத்துகைகள் தொடர்பிலான ஏடுகள், பதிவேடுகள் போன்றவற்றின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்கல் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டச் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட செயற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் போன்றவற்னை காட்டும் வகையில் தொடச்சியான அடிப்படையில் போதியளவு கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டன என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ள மீதியானது அத்திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்பதும்,

(ஐ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட

கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டன என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ள மீதியானது அத்திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் மீளளிப்பிற்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயமாக நம்பிக்கை கொள்ளமுடியுமென்றும்,

(உ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்ராயப்படுகின்றேன்.

## 4. நிதிசார் கூற்றுக்கள்

### 4.1 நிதிச் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாவிருந்த தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 36,813,813 தொகையாக காணப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,641,981,426 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினங்கள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| குடிசார் வேலைகள் | 8,758,861 | 13,663,714 | 1,205,430,909 |
| பொருட்கள் | 23,566,280 | - | 53,461,281 |
| மதியுரைச் சேவை | 590,000 | 1,493,000 | 173,050,422 |
| பயிற்சியளித்தல் | - | - | 8,082,574 |
| உயர்வடையும் மற்றும் நிர்வாகக் கிரயம் | 3,898,672 | 11,183,912 | 201,956,240 |
| | 36,813,813 | 26,340,626 | 1,641,981,426 |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு.

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாவிருந்த தகவல்களின் படி, செயற்திட்ட நோக்கத்திற்காக (கிராமிய வீதி முன்னோடிக் கூறு) இலங்கை மத்திய வங்கியில் (சீபீஎஸ்எல்) திறைசேரிப் பிரதிச் செயலாளரின் பெயரில் விசேட (டொலர்) கணக்கொன்று (உப பேரேட்டுக் கணக்கு இல. 125) திறக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போதான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கின் மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ. அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 77,747.12 | 9,886,386 |
| கூட்டுக: மீள் நிரப்பல்கள் | 292,609.65 | 37,724,765 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 460,286 |

| | | |
|---|---|---|
| | 370,356.77 | 48,071,437 |
| கழிக்க: மீளெடுத்தல்கள் | 293,302.28 | 37,996,331 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 77,054.49 | 10,075,106 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதி மீளாய்வு

ஆர்எஸ்ஏபீ இற்கு மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறன நிதிகளின் பயன்பாடு என்பவற்றுடன் தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலங்கள் | நிதிகளின் பயன்படுத்தல் | | | | | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | | ஏற்பாட்டின் சதவீதமாக 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 இற்கான பாதீட்டு ஏற்பாடு | | 2013 இல் பயன்படுத்திய நிதிகள் | | | | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | |
| உலக வங்கி | 14.4 | 1,632 | 0.08 | 10 | 0.28 | 36.17 | 14.3 | 1,622.8 | 99 |
| ஜீஓஎஸ்எல் | 0.21 | 25 | - | 0.5 | - | 0.63 | 0.17 | 19.1 | 80 |
| மொத்தம் | 14.61 | 1,657 | | 10.5 | | 36.8 | 14.47 | 1,641.9 | |

## 5.2 பௌதீகச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுழையக் கூடிய விதத்தில் கிராமிய வீதியை முன்னேற்றுவதற்காக செயற்திட்டத்தின் கீழ் 635 கி.மீ. கிராமிய வீதிகளை புனரமைத்து பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்த பின்னர் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 106 கி.மீ. கிராமிய வீதிகள் மாத்திரமே புனரமைக்கப்பட்டிருந்தன. .

(ஆ) ரிதிமலியத்த, மீகஹகிவுல மற்றும் சியம்லாண்டுவ பிரதேச சபை பிரிவுகளிலுள்ள வேலைத் தளங்களில் 2014 மே இல் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வராபிடிய, அலுகடியாவ, தெமடபெட்ட, வராகம, செனவிகம-திஸ்ஸபுர மற்றும் முதுகண்டிய கிரமங்களில் அமைந்துள்ள 24.1 கி.மீ. நீளமான ஆறு வீதிகள் ரூபா 114.5 மில்லியன் கிரயத்தில் புனரமைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், வீதிப் புனரமைப்பு நோக்கத்தில் அத்தியாவசியமான மதகுகள், கழிவோடைகள் மற்றும் கால்வாய்கள் போன்ற ஏனைய கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகவே, பரிசோதனை நேரத்தில் வீதியின் நிலமை மோசமாக சேதமடைந்திருந்தது.

(ii) ரூபா 84.6 மில்லியன் கிரயத்தில் புனரமைக்கப்பட்டிருந்த வராபிடிய, செனவிகம-திஸ்ஸபுர மற்றும் வராகம கிரமங்களில் அமைந்துள்ள 19.1 கி.மீ. நீளமான நான்கு வீதிகள் கடும் மழை காரணமாக புனரமைக்கப்பட்டு 16 மாதங்களின் பின்னர் நீரில் அடித்துச் செல்லப்பட்டிருந்தன. ஆகையால், அந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் தரம் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட கிராமிய வீதிகளை பராமரிக்கும் வேலைகள் அந்த வீதிகள் நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 221.8 மில்லியன் கிரயத்தில் புனரமைக்கப்பட்டிருந்த ரிதீமாலியத்த, மீகஹகிவுல மற்றும் சியம்லாண்டுவ பிரதேச சபை

பிரிவுகளிலுள்ள 11 வீதிகள் ஒழுங்கான அடிப்படையில் பொருத்தமான பராமரித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை காரணமாக சேதமுற்றிருந்தன.

(iv) வீதிப் பராமரிப்பு வேலை நோக்கத்திற்காக ரூபா 13.8 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கொங்ரீட் கலவை இயந்திரம், பாரந்தூங்கி போன்ற வாகனங்களும் உபகரணங்களும் அந்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனங்களும் உபகரணங்களும் ரிதீமாலியத்த, மீகஹகிவுல மற்றும் சியம்லாண்டுவ பிரதேச சபைகளால் வாடகை அடிப்படையில் மூன்றாம் தரப்பின் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தன.